# தேசிய பால் வளத்திட்டம்

(பகுதி - 1)

# ஜெர்சி கலப்பின வம்சாவழி சோதனை திட்டம்



அன்புடையீர்,

கிராமப்புறங்களில் உள்ள ஜெர்சி கலப்பின பசுக்களுக்கு " சோதனைகருவூட்டல் " செய்து அவற்றிக்கு பிறக்கும் கிடேரி கன்றுகள் பசுக்களாகி அவை தரும் பால் அளவு, தரம் ஆகியவற்றை கணினியில் பதிவு செய்து, அவற்றுள் சிறந்த பசுக்களுக்கு இனப்பெருக்க மதிப்பீடு அடிப்படையில் தரவரிசை செய்யப்பட்ட பொலிகாளைகளின் விந்தை கொண்டு " சிறப்பு கருவூட்டல் " செய்து தரமான சிறந்த மரபியல் திறனுள்ள கலப்பின பொலிகாளைகளை உற்பத்தி செய்வதே வம்சாவழி சோதனை திட்டமாகும்.

இத்திட்டத்தின் மூலம் தங்கள் கிராமத்தில் உள்ள பசுக்களின் பால் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு ஏதுவாக பயன்படுத்தப்படும் பொலிகாளைகளை உற்பத்தி செய்வதற்கு பால் உற்பத்தியாளர்களாகிய உங்களின் பங்கும் ஒத்துழைப்பும் மிகவும் முக்கியமானதாகும்.

1. இத்திட்டத்தில் பதிவு செய்யப்படும் தங்கள் பசுக்கள் மற்றும் கிடேரிகளுக்கு காதுவில்லை அணிவிப்பதை மறுக்காதீர்கள். இக்காதுவில்லையைக் கொண்டு கணினி மூலம் தங்கள் பசுக்கள் பற்றிய அனைத்து தகவல்களும் பராமரிக்கப்படும். ஒருவேளை காதுவில்லை விழுந்துவிட்டால் தங்கள் சங்கத்தில் உள்ள கிராம நல ஊழியரிடம் மறுமுறை காதுவில்லை அணிவிக்க கேட்டுக் கொள்ளுங்கள்.
2. அவ்வாறு இத்திட்டத்தில் பதிவு செய்யப்படும் தங்கள் பசுக்கள் மற்றும் சோதனை கருவூட்டல் மூலம் பிறக்கும் கிடேரிகள் கன்று ஈன்று பால் கறக்கும் அளவினை மாதம் ஒருமுறை பதிவு செய்ய வேண்டும்.
3. பால் பதிவு செய்ய வரும் பால் அளவையாளருக்கு முழு ஒத்துழைப்பு வழங்குங்கள்.
4. கன்று ஈன்ற 5 முதல் 20 நாட்களுக்குள் முதல் பால் கறந்த அளவை காலை, மாலை இரு வேளையும் பதிவு செய்வதுடன், ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட அதே தேதியில் பால் அளவீட்டை தொடர்ந்து 10 மாதங்கள் வரை பதிவு செய்ய வேண்டும். பத்து மாத பால் பதிவு முடிவுற்றவுடன் தங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். எனவே, பால் பதிவு அட்டையை பத்திரமாக வைத்திருந்து திட்ட மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கவும்.
5. பால் அளவிடும் நாளில் கன்றை பால் ஊட்ட அனுமதிக்காதீர்கள்.
6. பால் அளவிடும் நாளன்று பசு நோயுற்று இருப்பின் அவ்விபரத்தை பால் அளவையாளருக்கு தெரிவிக்கவும். நோய் குணமடைந்த பின்னரே பால் அளவீடு செய்யப்பட வேண்டும்.
7. பதிவு செய்யப்பட்ட பசுக்களின் பால் அளவீடு முடிவுற்றவுடன், அவற்றின் பால் கறவை திறன் அடிப்படையில், சிறந்த மரபியல் திறனுள்ள பொலி காளைகளை உற்பத்தி செய்வதற்கான தாய் பசுக்கள் தேர்வு செய்யப்படும். எனவே, திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பசுக்களை விற்பனை செய்வதை தவிர்க்கவும்.
8. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பசுக்களுக்கு, இனப்பெருக்க மதிப்பீடு அடிப்படையில் தரவரிசை செய்யப்பட்ட பொலி காளையின் விந்தை கொண்டு " சிறப்பு கருவூட்டல் " செய்வதன் மூலம் பிறக்கும் ஆரோக்கியமான காளை கன்றுகள் நல்ல விலை கொடுத்து இத்திட்டத்திற்காக வாங்கப்படும்.

எனவே, சிறந்த மரபியல் திறனுள்ள பொலி காளைகளை உற்பத்தி செய்து பால் உற்பத்தியினை அதிகரிக்க முழு ஒத்துழைப்பு நல்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.



மேலும் விபரங்களுக்கு அணுகவும்

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்**

ஆவின், வேலூர் - 9.

கைபேசி : 94432 43643.